**இந்திய உயர் ஸ்தானிகராலயம்**

**கொழும்பு**

**************

**<u>ஊடக அறிக்கை</u>**

**<u>பிரதி உயர் ஸ்தானிகரின் சந்திப்புக்கள்</u>**

பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ சிவநேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) மற்றும் திரு.விநாயகமூர்த்தி முரளிதரன் (கருணா அம்மான்) ஆகியோர் தலைமையிலான கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த பிரதிநிதிகளுடன் இந்திய பிரதி உயர் ஸ்தானிகர் திரு . வினோத் கே ஜேக்கப் அவர்கள் 2021 பெப்ரவரி 02 ஆம் திகதி இருவேறு சந்திப்புக்களில் ஈடுபட்டிருந்தார். இந்த இரு சந்திப்புக்களிலும் இலங்கையுடனான நீண்ட அபிவிருத்தி பங்குடைமை யை பேணுவதற்கான இந்தியாவின் உறுதிப்பாட்டினை பி ரதி உயர் ஸ்தானிகர் ஜேக்கப் அவர்கள் வலியுறுத்தியிருந்தார். பிரதி உயர் ஸ்தானிகர் ஜேக்கப் மற்றும் கௌரவ. சிவநேசதுரை சந்திரகாந்தன் ஆகியோர் மாகாண சபைகள் மற்றும் 13 ஆவது திருத்தத்தினை முழுமையாக அமுல்படுத்துதல் குறித்தும் கலந்துரையாடியுள்ளனர்.

போரினால் பாதிக்கப்பட்ட விதவைக ள் மற்றும் விசேட தேவையுடையோர்களுக்கான வாழ்வாதார வாய்ப்புக்கள், கல்வி மற்றும் புலமைப்பரிசில் உள்ளிட்ட பல்வேறு விடயங்க ளின் எதிர்கால அபிவிருத்தி ஒத்துழைப்புக்கான சாத்தியப்பாடுகள் தொடர்பாக வும் இந்த சந்திப்பின்போது திரு .விநாயகமூர்த்தி முரளிதரன் அவர்கள் எடுத்து ரைத்துள்ளார். மாகாண சபை மற்றும் 13 ஆவது திருத்தத்தினை முழுமையாக அமுல்படுத்துதல் ஊடாக தமிழ் மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றுவதற்கான சிறந்த வழி அர்த்தப்புஷ்டியான பரவலாக்கம் என்பதே இந்திய அரசாங்கத்தின் நிலைப்பாடு என்பதனை பிரதி உயர் ஸ்தானிகர் இந்த சந்தர்ப்பத்தில் வலியுறுத்திக்கூறினார்.

**************

கொழும்பு

02 பெப்ரவரி 2021